# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

MAALAI EXPRESS DATED 17.05.2025



மாலை எக்ஸ்பிரஸ்
மாலை நாளிதழ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

# கல்லூரி மாணவ, மாணவிகளின் தேசியக்கொடி வெற்றி ஊர்வலம்

**ஆளுநர் கைலாசநாதன் தொடங்கி வைத்தார்**



புதுச்சேரி, மே 17-

புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் தேசியக் கொடி வெற்றி ஊர்வலம் புதுச்சேரி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் கைலாசநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக இந்திய ராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தி இந்திய ராணுவத்தின் பலத்தை உலகத்திற்கு தெரியப்படுத்தினர். அதற்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் விதமாக மாணவ, மாணவர்களின் இந்த பேரணி நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ பாபு, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### NAAMATHU MURASU DATED 17.05.2025



புதுவை பல்கலைக்கழகம் சார்பில் பல்கலைக்கழக வளாகத்தில் திரங்கா தேசியக்கொடி வெற்றி பேரணி நிகழ்ச்சியில் என்.சி.சி., என்.எஸ்.எஸ். கல்லூரி மாணவர்களுடன் கவர்னர் கைலாசநாதன் மற்றும் அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பேரணியை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் காலப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் கல்யாண சுந்தரம் மற்றும் பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

MAALAI MALAR 17.05.2025

**புதுவை பல்கலைக்கழகத்தில்**

# மாணவர்கள் தேசிய கொடி பேரணி

## கவர்னர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, மே.17—

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்களை அழித்த ஆபரேஷன் சிந்தூார் ராணுவ நடவடிக்கைக்கு நாடு முழுவதும் வரவேற்பு கிடைத்துள்ளது.

சிந்தூர் நடவடிக்கையை வரவேற்கும்விதமாக அரசியல் கட்சியினர், மாணவர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள் நாடு முழுவதும் தேசியக்கொடி பேரணியை நடத்தி வருகின்றனர்.

புதுவையிலும், காங்கிரஸ், பாஜனதா சார்பில் தேசியக்கொடி பேரணி நடந்தது.

### தேசிய கொடி பேரணி

இந்த நிலையில் இன்று புதுவை பல்கலைக்கழகத்தில் என்.சி.சி, என்.எஸ்.எஸ். கல்லூரி மாணவர்களின் தேசியக்கொடி பேரணி நடந்தது. பல்கலைக்கழக துணைவேந்தர் அலுவலகத்திலிருந்து தொடங்கிய பேரணியை கவர்னர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்து பேரணியில் பங்கேற்றார்.

பேரணியில் அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு, பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர். ஊர்வலம் பல்கலைக்கழக வளாகத்தை சுற்றி வந்தது. ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் தேசியக் கொடி ஏந்தி பாரத் மாதா கீ ஜே என கோஷம் எழுப்பியபடி வந்தனர்.

DINAKARAN DATED 15.05.2025